# வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ எம் ஜே அக்பர் அவர்களின் மாலி குடியரசு மற்றும் காங்கோ குடியரசிற்கான வருகை (28 பிப்ரவரி - மார்ச் 6, 2017)

**பிப்ரவரி 25, 2017**

இந்திய வெளியுறவு அமைச்சர், ஸ்ரீ எம் ஜே அக்பர் 28 பிப்ரவரி முதல் 4 மார்ச் 2017 இல் மாலி குடியரசிற்கும் மற்றும் மார்ச் 5 – 6, 2017 இல் காங்கோ குடியரசிற்கும் ஒரு உத்தியோகபூர்வ விஜயம் செலுத்த உள்ளார். இந்த விஜயம், இரு நாடுகளுடன் இந்தியாவின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் பின்னணியில் நடைபெறுகிறது.

மாலியிற்கான தனது விஜயத்தின் போது அமைச்சர் மாலி குடியரசு ஜனாதிபதி மாண்புமிகு திரு இப்ராஹிம் பௌபகார் கெய்தா மற்றும் மாண்புமிகு பிரதமர் திரு மொதிபோ கெய்தா அவர்களை சந்திக்க உள்ளார். அமைச்சர் அவர்கள் மாலி வெளியுறவு அமைச்சர் மாண்புமிகு திரு அப்துலேயே டியோப் அவர்களுடன் இணைந்து முதல் இந்தியா-மாலி கூட்டு ஆணைக்குழு கூட்டத்தை தலைமை தாங்க உள்ளார். இந்த கூட்டு ஆணைக்குழு இந்தியா மற்றும் மாலி பரஸ்பர நலன் சார்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்து பரந்த விவாதங்களை நடத்தும். அமைச்சர் திம்புக்டுவிற்கு வருகை சைவதுடன் மற்றும் திம்புக்டுவின் பாரம்பரியத்தை மறுசீரமைப்பு செய்வதை நோக்கி மாலியிர்கான இந்தியாவின் ஆதரவு அமெரிக்க $ 0.5 மில்லியனிற்கான காசோலையினை வழங்க உள்ளார்.

காங்கோ குடியரசிற்கான தனது விஜயத்தின் போது, அமைச்சர் மாண்புமிகு குடியரசு ஜனாதிபதி திரு டெனிஸ் சஸ்சௌ குவெஸ்ஸோ மற்றும் மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் திரு ஜோன் குளோட் காகொஸ்ஸோ ஆகியோரை சந்திக்க உள்ளதுடன் மற்றும் உர துறையில் ஒத்துழைப்பை

வலுப்படுத்துவது உட்பட இரு நாடுகளுக்கும் இடையே ஈடுபாட்டிற்கான பல்வேறு பகுதிகளினை விவாதிக்க உள்ளார்.

அமைச்சர் இரு நாடுகளிலும் உள்ள இந்திய சமூகத்தின் உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள உள்ளார்.

**புது தில்லி**

**பிப்ரவரி 25, 2017**